முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.09.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ் அலை பதிப்பகத்தின் சார்பில் கவிஞர் அறிவுமதி அவர்கள் எழுதிய "உலக அமைதிக்கான நூல் புறநானூறு" என்ற நூலினை வெளியிட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன், கவிஞர் பழனிபாரதி, கவிஞர் இசாக், பழ. செல்வகுமார் ஆகியோர் உள்ளனர்.

தமிழ் வளர்ச்சித் துறையில்

13 உதவி இயக்குநர்களுக்கு பணி நியமன ஆணை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 23-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.09.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாகத் தெரிவு செய்யப்பெற்ற 13 நபர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடத் திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு அலுவலகங்க ளில் தமிழ் ஆட்சிமொழித் திட் டத்தை முழுமையாகவும் செம் மையாகவும் செயற்படுத்திடும் வகையில் 1958ஆம் ஆண்டு ஆட்சி மொழிக்குழு உருவாக்கப் பட்டு, ஓர் ஆய்வுத் தனி அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டது. அதன்பின்னர் 1972 இல் இப்பணி யிடத்துடன் சேர்த்து ஒன்பது ஆய் வுத் தனியலுவலர் பணியிடங்க ளாக உருவாக்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர் களால் தமிழ் வளர்ச்சித் துறையின் அலுவலகக் கட்டமைப்பு சீரமைக் கப்பட்டு தமிழாய்வு அலுவலர் என்ற பதவிப் பெயரினை மாற்றி ஒருமுகமாக உதவி இயக்குநர் பணியிடங்கள் என 1998 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவு றுத்தியதற்கிணங்க, தமிழ் வளர்ச் சித் துறை உதவி இயக்குநர் பணி யிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நிறைவு செய்திட அர சாணை வெளியிடப்பட்டது.

இளங்கலை மற்றும் முதுகலை தமிழிலக்கியம் பயின்ற மாணவர் களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியா ளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வு மற்றும் நேர்காணல் நடத் தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 13 நபர்களுக்கு உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் நேற்றைய தினம் வழங்கினார். தமிழ் இலக்கி யக் கல்வி கற்றவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக் குநர்களாகப் பணி வாய்ப்புப் பெற் றுள்ளது தமிழுக்கான நற்காலம் மட்டுமல்ல பொற்காலமுமாகும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாரா மன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.